**தலைப்பு 159 – சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 செலவு விடயங்களுக்காக கொடுக்கப்பட்டிருந்த ரூபா 350,300,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கீட்டையும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் பிழையற்ற செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | பதில் அமைச்சரொருவர் நியமிக்கப்படாமையினால் வீட்டு வாடகை கொடுக்கப்படாமை மற்றும் வரவு செலவு திட்ட பிரேரணை மூலம் முன்வைக்கப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் பொறுப்பேற்றல் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் பற்றுச்சீட்டுக்கள் செலுத்துவதற்கு கட்டுநிதி கிடைக்காமை. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94 பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு இருந்தால் மாத்திரம் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள முடியுமாயினும் 03 நடவடிக்கை வேலைத் திட்டங்களின் மிகுதியை மீறப்பட்டு ரூபா 1,887,833 ஆன தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக செயல்படல் வேண்டியமை. | சம்பந்தப்பட்ட வருட திசெம்பர் மாதத்திற்காக பற்றுச்சீட்டு அடுத்தவருடம் செலுத்தவேண்டிய பொறுப்பு ஆகும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த உற்பத்தி அளவினை எட்டாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி கரையோர பகுதியில் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | | |
| (i) திட்டத்தினது பெறுகை மதிப்பீட்டு பெறுமதி ரூபா 39.188 மில்லியன் ஆக இருந்தபடியால் பெறுகை நடவடிக்கையின் போது தேசிய போட்டி விலை மனுகோரல் செய்ய வேண்டி இருந்த போதிலும், வரையறுக்கப்பட்ட சந்தை விலை மனுக்கோரல் முறைமையை பின்பற்றப்பட்டிருந்தது. | 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டியமை. | 2016/2017 வருடங்களுக்கான ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான வெளிப்படை போட்டி முறைமையை பின்பற்ற புதினப் பத்திரிகைகள் ஊடாக விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பதியப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டன. |
| (ii) தலா 120 சதுர அடி கொண்ட 10 தற்காலிக கடைகளை கட்டவும் 1346.8 சதுர அடி அளவிலான தற்காலிக | நிர்மாணப் பணிகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகார பத்திரத்திற்கு | கட்டட திணைக்களத்தினதும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினதும் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப்பட்டிருந்தன. இந்த நிர்மாணப் பணிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு சாலைகளை அமைக்கவும் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்திற்கமைய கரோயோரத்திலிருந்து (Permanent Vegetation Line) 45 மீட்டர் தூர எல்லைக்குள் எவ்வித நிர்மாணப் பணிகள் செய்யப்படாது இருந்த போதிலும், அவ் எல்லைக்குள் சிற்றுண்டி சாலையொன்றும் 05 கடைக் கூடங்களும் கட்டப்பட்டிருந்தன. மேலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த சகல கட்டிடங்களும் நிரந்தரமானவைகளாக இருந்தன. | அமைவாக செயல்பட வேண்டியமை. | நிரந்தர கட்டமைப்பினை ஏற்படுத்துதல் சம்பந்தமான தொடர்பினை ஏற்று கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சூரிய மின் விளக்கு கம்பங்கள் ஸ்தாபிக்கும் வேலை விடயத்தின் கீழ் ஒன்று ரூபா 30,000 க்கு செய்யப்பட்டிருந்தது. அந்த மின் விளக்குகளையே மேலதிக வேலை விடயத்தின் கீழ் ரூபா 151,200 க்கு உடன்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 6,423,600 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | கண்டுபிடிக்கக் கூடிய நட்டத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இவ்வாறான சுற்றுலா மத்திய நிலையங்கள் நிர்மாணிப்பது சம்பந்தமான திட்டங்களை செயல்படுத்துதல் முதன்முறையாக மாவட்ட செயலகங்கள் மூலம் அமுல்படுத்துவதும் செயல்படுத்தலின் போது ஏற்படக் கூடிய விடுபடுதல் மற்றும் திட்டங்களை அமுல்படுத்தும் போது ஆரம்பத்தினை கவனத்திற் கொள்ளாமை ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களாகும். முன்னால் இது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படும். |
| (ஆ) | மட்டக்களப்பு சல்லைத் தீவின் அபிவிருத்தி வேலைக்காக ரூபா 9,992,200 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இரு இரட்டை வீடுகளை கோரளைப்பற்று பிரதேச சபைக்கு ஒப்படைத்து 2 ½ வருடங்கள் சென்றிருந்த போதிலும் தண்ணீர் மற்றும் மின்சாரம் இல்லாமையினால் சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை. | தண்ணீர் மற்றும் சுகாதார வதிசகளை வழங்கி சுற்றுலா பயணிகளுக்கு பயன்தரும் வகையில் சீர் செய்ய வேண்டியமை. | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை பவுசர் மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு உடன்பட்டு இருப்பதுடன் மின் உற்பத்தி இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஏறாவூர் சவுக்கடி கரையோரப் பகுதியில் பூங்காவொன்று நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கைப் படி2017 திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வேலை முடிக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும், 04 மாதம் தாமதித்து வேலை பூர்த்தியாக்கப் பட்டிருந்தமையினால் தாமத காலத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 347,714 அறவிடப்பட்டிருக்கவில்லை மேலும், நிர்மாணிக்கப்பட்ட கடைகள் வியாபாரம் அலுவலுக்காக பயன்படுத்தப்படாமை மற்றும் சுகாதார வசதிக்காக மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் திறக்கப்படாது இருக்கின்றமையினால் அவைகள் செயழிலந்த நிலையில் காணப்படுகின்றன. | ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைவாக செயல்பட வேண்டியதுடன் மக்களுக்கு பயன்பெற்றுக் கொடுக்க வேண்டியமை. | பிரதம செயலாளர் கிழக்கு மாகாணத்திலிருந்து விளக்கமொன்றை கோருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**3.2 அரச உத்தியோகத்தர் பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 880 நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அமைச்சில் பிணை எடுக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக செயல் பட வேண்டியமை | இது சம்பந்தமான விடயம் திறைசேரி ஆலோசனையுடன் நிறைவேற்றுதவற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |